**O.S. No.3/2015**

**Date : 16.08.2021.**

வா.சா.1 திருமதி.ரேவதி.

**முதல் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

வா.சா.ஆ.22 ஆவணம் நான் கேட்டதன் அடிப்படையில் எனது வழக்கறிஞர் பெற்றார். உயில் பத்திரத்தில் சந்தேகம் இருந்ததால் வா.சா.ஆ-22யை பெற்றேன். வா.சா.ஆ-22யை கொடுத்தவரை விசாரித்தால் தான் உண்மைத்தன்மை தெரியும் என்றால் சரியல்ல. அவர் தவறாக தகவல் கொடுத்திருக்கலாம் என்று சொன்னால் சரியல்ல. 07.11.2011ல் எனது பாட்டி உயிரோடுதான் இருந்தார். அதே தேதியில் எனது தாத்தாவும் உயிரோடு தான் இருந்தார். அதனால் பி.வா.சா.ஆ.1 உயில் சாசனம் முறையாக பெறப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் வா.சா.ஆ-22யை தவறான முறையில் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல.

**முதல் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணையை 2 முதல் 3 பிரதிவாதிகள் ஏற்றுக்கொள்கிறார்கள்.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சுருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

/sd/-G.Vijaya,

முதன்மை மாவட்ட நீதிபதி,
தேனி.